## சார்பு நீதிமன்றம், நெய்வேலி

## MCOP.No. 129 /2023

பெயர் : திரு. வினோத் (ம.சா.1)

தந்தை பெயர் : திரு. வெங்கடேசன் தொழில் : இல்லை

கிராமம் : பெரியகாட்டுசாகை

தாலுக்கா : குறிஞ்சிப்பாடி வயது : 33

தேதி : 13.08.2026

**2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13-ம் நாளாகிய இன்று சாட்சியாக ம.சா.1 இன் வாக்குமூலம் (1873-ம் ஆண்டின் 10 ஏற்பாட்டின் படி) திரு.M.தயாளன், எம்.எல்., சார்பு நீதிபதியாகிய என்னால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.**

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் இம்மனுவில் மனுதாரர் மற்றும் ம.சா.1 ஆவேன், எனது தரப்பு முதன்மை சாட்சியத்திற்கு பதிலாக சத்திய பிரமாணவாக்குமூலத்தை தாக்கல் செய்திருக்கிறேன். அதில் சொல்லியுள்ள சங்கதிகளை படிக்க நான் கேட்டு அந்த சங்கதிகளை நான் புரிந்துகொண்டு சரி என்று ஒப்புக்கொண்டு இடதுகை பெருவிரல்ரேகை செய்திருக்கிறேன். அதனை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். எனது தரப்பு சான்றாவணங்களாக பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 10 வரை உள்ள ( **1) முதல் தகவல் அறிக்கை நகல் (குள்ளஞ்சாவடி காவல்நிலைய குற்ற எண்.126/2023), 2) விபத்து பதிவேடு நகல்- கடலூர் அரசு தலைமை மருத்துவமனை, 3) Discharge Summary- சென்னை அரசு Stanley மருத்துவக் கல்லூரி மருத்துவமனை (DOA: 15.04.2023 DOD: 29.04.2023), 4) Out Patient Record- கடலூர் ஆனந்தா பிசியோதெரபி கிளினிக் , 5) Out Patient Record- கடலூர் ஸ்ரீ ஜெயம் மெடிக்கல்**

**சென்டர், 6) 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல், 7) 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் இன்சூரன்ஸ் பாலிசி நகல், 8) இறுதி அறிக்கை நகல், 9) குறிஞ்சிப்பாடி அரசு மருத்துவமனை மருத்துவக்குழு மருத்துவர் மனுதாரரை பரிசோதித்து 60 விழுக்காடு நிரந்தர உடல் ஊனம் என்று வழங்கி பதிவுப் புத்தகம் நகல், 10) மனுதாரரின் ஆதார் அட்டை நகல், )** ஆவணங்களை குறியீடு செய்ய கேட்டுக்கொள்கிறேன். மேற்படி ஆவணங்களானது மனுதாரர் தரப்பில் **ம.சா.ஆ 1 முதல் ம.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகின்றன. மனுப்படி உத்தரவிட கேட்டுக்கொள்கிறேன்.

**(எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

**(ஒப்பம்/-திரு.M. தயாளன், எம்.எல்.,)**
**சார்பு நீதிபதி,**
**நெய்வேலி**